படேல்ஸ்தானில் சாஸ்திரி தர்பார்

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (22—2—50) வெளியூர் (23—2—50) [இதழ் 175

பிர்லாவின் 'பேராசை' பலிக்கிறது

பிற்போக்குக் கும்பலிடம் மக்கள் சிக்கினர்

———(0)———

'பணம் பிடுங்கிகள்' படுத்தும் பாடு

அறுபது இலட்சம் மக்கள் சாஸ்திரி தர்பாரில் சிக்கித் தத்தளிக்கிறார்கள்.

சாஸ்திரியோ, தன் எஜமானர்களான படேல், பிர்லா, ஆகியோரின் புன்னகையைப் பெறுவதற்கான முறையிலே நடந்து கொள்ளுகிறார். மக்களைப் பற்றிக் கவலையற்று ஜெய்பூரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டுக்காக, ராஜஸ்தானில் உள்ள ஜெயபூர், பிகானீர், உதயபூர் போன்ற சமஸ்தானங்களிலிருந்து சாஸ்திரி பணம் திரட்டிக் கொடுத்திருக்கிறார்,—14 இலட்சம் ரூபாய்!

ராஜஸ்தான் படேல்ஸ்தானாகிவிட்டது.

மகாராஜாக்களைப் பணிய வைத்த மாவீரர் எமது சர்தார் என்று ஒருபுறம் மக்கள் வாழ்த்தொலி கிளப்பிக் கொண்டிருக்கும்போதே, ராஜஸ்தானை படேல்ஸ்தான் ஆக்கும் படுமோசச் செயல் நடைபெற்றுக்கொண்டு வந்தது.

ஆர்த்தி எடுத்தனர்! மகர தோரணங்கள் கட்டினர்! வெற்றி விழா கொண்டாடினர். ராஜாக்களின் தர்பார் ஒழிந்தது, மக்களாட்சி மலர்ந்தது, எல்லோரும் இந்நாட்டு மன்னராயினர் என்று கீதம் பாடினர். சூதுவாதறியா— மக்கள்—சுகம் பிறந்திடும் என்று களிப்பு.

அவர்கள் எதிர்பாராதது நடைபெற்று விட்டது! ராஜஸ்தான படேல்ஸ்தானாகி விட்டது!!

முடிதரித்தோரின் ஆதிக்கம் ஒழிந்தது என்று மகிழ்ந்தனர்- இப்போது இரும்புப் பிடியிலே சிக்கிக்கொண்டோமே என்று எண்ணித் திகைக்கின்றனர்.

ராஜஸ்தான்-இந்தியத் துணைக் கண்டத்திலே, எழிலார் சுர்கு ஏற்ற இடம். ராணுவக்காரரின் மொழிப்படி கூறுவதானால், "கேந்திரஸ்தானம்" இங்குள்ள வரண்ட பூமிகள் வளமாக்கப்படக் கூடியன! பெட்ரோல் ஊற்றுகள் கிடைக்கக் கூடுமென்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

பெட்ரோல் கிடைக்குமானால் அந்த இடத்தின் பொருளாதார பலம் எவ்வளவு வளர்ந்துவிடும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அப்படிப்பட்ட ராஜஸ்தான், படேல்ஸ்தானாக்கப்பட்டு விட்டது.

மக்களின் விரோதிகள்—விடுதலைப் போரை ஒடுக்கியவர்கள்—சுறண்டும் வர்க்கத்தினர்—இன்று,பட்டேலினால் மந்திரிகளாக்கப்பட்டு விட

(தொடர்ச்சி 4-ம் பக்கம்பார்க்க)

வியட்னும் கம்யூனிஸ்ட் வசமாக விடமாட்டார்களாம்!

கடைசிவரை ஒருகை பார்ப்பார்களாம்!

அமெரிக்காவின் மிரட்டல்

லண்டன், பிப். 21—

வியட்னும் கம்யூனிஸ்ட் வசமாகாமல் தடுக்க, எவ்விதத் தீவிர அளவுக்கும் செல்ல யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் தயாராக இருக்கிறது என்று வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

பிரஸிடண்ட் ட்ரூமனின் உதவித்திட்டம் தென் கிழக்கு ஆசியாவுக்கு விஸ்தரிக்கப்படுவதுபற்றி, சீக்கிரமே ஒரு அறிக்கை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிரீஸ் முன்பிருந்த நிலைமையில் இப்பொழுது இந்தோசீனு இருக்கிறது என்று அமெரிக்காவில் கருதப்படுகிறது.

யுத்தக் கப்பல்களுக்கு நவீன சாதனங்கள்

லண்டன், பிப். 21—

பிரிட்டிஷ் கடற்படைக்கு ரேடியோ ராடார் சாதனங்களை அமைக்க இப்பொழுது அதிக செலவாகிறதென்று கூறப்படுகிறது.

முன்பு ஒரு ராசகாரிக்குரேடியோ அமைக்க ரூ39000 செலவாகியதாம் இப்பொழுது ரேடியோ ராடார் சாதனம் அமைக்க ரூ 910,000 செலவாகிறதாம். (ருனோப்)

ஹாங் ஹாங்எல்லையில் கம்யூனிஸ்டு துருப்புகள்!

லண்டன், பிப். 21—

ஹாங் ஹாங் எல்லையில் சுமார் 25000 பயிற்சி பெற்ற சின கம்யூனிஸ்டு துருப்புகள் குவிகின்றனவென்றும் ஆனால் இதனால் ஹாங் ஹாங்கிற்கு அபாயம் ஏற்படும் என்ற அர்த்தமில்லை என்று அதிகாரிகள் கருதுகின்றனர் என்றும் இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

புது இன்புளுயன்ஸா ஜுரம்

பாரிஸ், பிப். 21—

டன்கிர்க், மாபேஜ் ஆகிய இடங்களில் புது இன்புளுயன்ஸா ஜுரம் குழந்தைகளுக்கிடையே பரவுகிறதென்றும், இந்த ஜுரம் வந்த குழந்தைகள் பிழைப்பதில்லை என்றும் கூறப்படுகிறது. ஒரு வயதுக்குட்பட்ட பத்து குழந்தைகள் இந்த ஜுரம் கண்ட சில மணி நேரத்திற்குள்ளேயே இறந்து விட்டனவாம்.

ஆஸ்திரேலியாவில் தாராளமாக வேலைகிடைக்கிறதாம்

ஸிட்னி, பிப். 21—

ஆஸ்திரேலியாவில் குடியேறுபவர்கள் வேலை கிடைக்காமல் போகுமோ என்று பயப்படவேண்டியதில்லை என்றும், ஏராளமான வேலை காலியாக இருக்கிறதென்றும் பெமல் 'எம்பிளாய்மெண்ட் பீரோ' வெளியிட்டிருக்கிறது.

இப்பொழுது 101000 வேலை காலியாக இருக்கிறதாம். -ருனோப்

இறக்குமதி செய்யப்படும் உணவு தானியங்கள்

விலை நிர்ணயம்பற்றி இந்திய சர்க்கார் சுற்றறிக்கை

சென்னை, பிப். 21—

நம் நாட்டில் இறக்குமதி செய்யப்படும் உணவு தானிய வகையராக்களுக்குக் கொடுத்து எடுத்துக் கொள்ளவேண்டிய விலைகளை நிர்ணயித்து இந்திய சர்க்கார் எல்லாப் பிரதேச உணவு கமிஷனர்களுக்கும் உதவி கமிஷனர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கின்றனர்

இதன்படி கோதுமை மாவு ஒரு மணங்கு (82 2/7 பவுண்டு) விலை ரூ. 19-8-0, அரிசி ஒரு மணங்கு (82 2/7 பவுண்டு) விலை ரூ. 22 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் கோதுமை ஒரு மணங்கு ரூ. 15-க்கும், பார்லி, சோளம், மைலோ, நவதானியங்கள் முதலியவை ரூ. 11-4-0 க்கும் தொடர்ந்து விற்கப்பட்டுவரும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது துறைமுகப்பகுதிகளிலோ, அல்லது கப்பல்களுக்கருகாமையிலோ, வாங்கி வாகன் கன்டிராக்குகளில்ஏற்றப்படும் மூட்டைகளுக்கே மேற்கண்ட விலை விகிதங்கள் என கூறப்பட்டிருக்கிறது.

இந்த விலை விகிதங்கள் இவ்வருஷம் ஜூன் 30ந் தேதிவரை நீடித்திருக்குமென்றும், இந்தக்காலத்தில் அது எப்படி நடைபெறுகிறது என்பதைக் கவனித்து அவசியமானால் சற்று மாற்றி ஜூலை 1-ந் தேதிமுதல் அமுலுக்குக் கொண்டுவரலாம் என்றும் அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

அஸ்மாரா, பிப். 21—

ஐ. நா. கமிஷன் வந்துசேர்ந்ததிலிருந்து எரிட்ரியாவில் அமைதி நிலவுகிறது என்றாலும் அரசியல் இயக்கம் வலுப்பெற்றிருக்கின்றன.

அயல்நாட்டு இந்தியரின் எதிர்காலம்

———(0)———

பிரிட்டிஷ் வட்டாரக் கருத்து

லண்டன், பிப். 21—

தென்னுப்பிரிக்க இந்தியர் பிரச்னை வெற்றிகரமாகத் தீர்க்கப்படுவதன் மூலம், மலயா, பிஜி, கென்யா முதலிய இடங்களிலுள்ள இந்தியர்களுக்கும் நல்லகாலம் பிறக்கும் என்ற கருத்து, இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இவ்விஷயம் பற்றி பர்மிங்காம் போஸ்ட் எழுதுவதாவது:—

தென்னுப்பிரிக்கா, மலேயா, பிஜி முதலிய இடங்களில் இந்தியர்கள் தங்கள் உழைப்பாலும், வர்த்தகத் திறனுலும் பொருளாதார வாழ்க்கையில் முன்னணி நிலைமை அடைந்திருக்கின்றனர். அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான கல்வி அறிவும் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே அவர்கள் அந்த உரிமைகளை கோர நியாயமுண்டு.

நேட்டால் இந்தியர்கள் விஷயமாக முடிவு செய்யப்படும் விஷயங்கள், காமன்வெல்த்தில் இதர இடங்களில் வசிக்கும் இந்தியர்களுக்கும் சட்டாயம் கிடைக்கும். தென்னுப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் வட்டமேஜை மாநாடு வெற்றியில் முடியும் என்றே நம்பிக்கை இருந்து வருகிறது.

சிறைக்குள் விசாரணை!

சேலம் 'படுகொலை' வழக்கு

சென்னை, பிப். 20—

அண்மையில் சேலம் சிறையில் நடைபெற்ற படுகொலை நிகழ்ச்சி பற்றினவிசாரணை சேலம் மத்தியசிறைக்குள் இம்மாதம் 24-ந் தேதியன்று ஆரம்பமாகுமெனத் தெரிகிறது. சுமார் 50 சாட்சிகள் விசாரிக்கப்படுவர்.

பித்தம் தெளிய...

பித்தம் ஏற்படுவதற்குக் காரணமாகவுள்ள சில அம்சங்களைக் குணப்படுத்தும் புதிய மருந்து ஒன்றை பாரிஸ் பேராசிரியர் ஜீன் டிலே என்பவர் தன் சகாக்களின் ஒத்துழைப்புடன் தயாரித்திருக்கிறார். இம் மருந்து மூலம் சீக்கிரம் குணம் தெரிகிறதாம்.

பர்மாவுக்குக் கடன் உதவி

அந்தரங்க நோக்கம் எதுவும் இல்லையாம்!

———(0)———

பிரிட்டிஷ் அதிகாரியின் சப்பைக்கட்டு!

லண்டன், பிப். 21—

பர்மாவுக்கு 60 லக்ஷம் ஸ்டர்லிங் கடன் உதவி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டு விட்டதென்று, இவ்விஷயமாக அறிவிப்பதுபற்றி ரங்கூனிலுள்ள காமன்வெல்த் ஸ்தானிகர்கள் கூடி ஆலோசித்து வருகின்றனர் என்றும் பிரிட்டிஷ் அயல் நாட்டு லாகா அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

இத்துடன் உதவி அளிப்பதில் அந்தரங்க நோக்கம் எதுவும் இல்லை என்றும், தென்கிழக்கு ஆசியாவில் அரிசி உற்பத்தி அதிகரிக்கவே இது தரப்பட்டிருக்கிறதென்றும்,அரிசிஉற்பத்திக்காகவே இத்தொகையை பர்மா செலவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினர். —ருனோப்

மாலை மணி

சென்னை 22—2—50 புதன்கிழமை

மாவீரர் மறைந்தார்

வங்கத்தின் சிங்கம், காங்கிரஸின் பங்கத்தைப் பயப்படாமல் பகிரங்கப்படுத்தி வந்த மாவீரர், இடது சாரியினரை இணைத்து வைத்து ஆளும் ஏதேச்சாதிகார சக்தியை ஆட்டிப்படைத்து, ஆவன புரிய எண்ணியிருந்த தீரர் வங்க மக்களின் உரிமை வேட்கையுணர்ச்சியை ஒன்றாகத் திரட்டி ஒருருவமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த தலைவர், சுபாஷ் சந்திரபோசின் உடன் பிறந்த முன்னவர் ஆகிய சரத் சந்திரபோஸ் மறைந்தார்—மக்களிடையே நடமாடுவதினின்றும் பிரிந்தார் என்ற செய்தி மிக்க மனவருத்தத்தையும், துக்கத்தையும் அளிக்கிறது. குறிப்பாக வங்க மக்களுக்கு அவரது ஆற்றொணாத் துயரத்தைக் கொடுக்கக் கூடியது என்னும்போது மனக் கலக்கம் ஏற்படுகின்றது.

அரசியல் அரங்கிலே சூதாடிகளும், மோசக்காரர்களும், செப்பிடு வித்தைக்காரர்களும் நாளுக்கு நாள் மலிந்து, நாட்டின் நல்வாழ்வை நலியவைத்துத் தம்முடைய வாழ்வை நல்வாழ்வாக ஆக்கிக்கொண்டு வரும் இக்காலத்தில், சரத்சந்திரபோஸ் போன்ற ஒரு சிலரைத்தான் உண்மைக்கும், உறுதிக்கும் பரிந்து பேசுபவர்களாகக் காண முடிந்தது. அவரது பிரிவு நேர்மையிலும், நீதியிலும் நாட்டங்கொண்டு விளங்கும் அரசியல் வாதிகளுக்கும், குறிப்பாக இடது சாரிக் கொள்கையினர்க்கும், மிகமிகக் குறிப்பாக வங்க மக்களுக்கும் ஒரு பெரும் இழப்பாகும்.

படர்ந்து வரும் காங்கிரஸ் பாசிசப் புகைப்படலத்தை, அழிக்கும் ஆற்றல் கொண்ட முன்னணி வீரர்கள் கூட்டத்தில் தோழர் சரத்சந்திரபோஸ் முக்கியமான ஒருவராக விளங்கினர். அவரது அஞ்சா நெஞ்சம் வங்க அரசாங்கத்தையும், ஓர் அளவுக்கு இந்திய அரசாங்கத்தையும் அச்சங்கொள்ளுமாறு ஆக்கியிருக்கிறது. சரத்சந்திரபோஸ் வீசும் ஒவ்வொரு சொற்றுண்டும், தேசியவாதிகளின் கருத்தற்றபோலிப்பதவிக்கோட்டைகளை உடைத்தெறிந்து வந்தன. அந்த நிலைமை இனி ஏற்படாது; தம்மை எதிர்த்து நின்ற ஆற்றலுடைய மாவீரன் மறைந்துவிட்டான்; எனவே இனி மன அமைதியோடு ஆட்சிப்பீடத்திலமர்ந்து ஆதிக்கம் செலுத்தலாம், என்ற மனமகிழ்ச்சியைத் தேசீய வீரர்கள் ஒருக்கால் கொண்டாலும் கொள்வார்கள்!

தோழர் சரத்சந்திரபோஸின் தகுதியும், திறமையும் காங்கிரஸிலுள்ள வேறு எந்தத் தலைவரின் தகுதிக்கும், திறமைக்கும் எள்ளளவும் குறைந்தன அல்ல. இன்றைய ஆட்சிப் பீடத்திலமர்ந்திருப்பவர்கள் செய்த அளவு தியாகத்தில், எந்த விதத்திலும் குறைந்ததல்ல தோழர் சரத் போஸின் தியாகம். ஆனாலும் அரசியல் துறையில் அவரோடு ஒத்த தரத்தினர் ஆட்சிப் பீடத்தில் வீற்றிருந்தும், அவர்களுக்கு எதிராகத் தனித்து நாட்டு மக்களின் பக்கம் நிற்பதையே பெரிதும் அவர் விரும்பினர். அவர் பதவியின் புன் சிரிப்புக்கும், பித்தலாட்டத்தின் அணைப்பிற்கும் இடங்கொடுக்க சிறிது சம்மதம் அளித்திருப்பாராயின் அவரும் இந்திய ஆளவந்தார்களில் ஒருவராகத் திகழ்ந்திருப்பார். இடைக்கால சர்க்கார் கூட அவரை அழைத்து ஓரிரு மாதங்கள் ஆட்சிப் பீடத்திலிருத்திவைத்தது, நீதியுள்ளமும், நேர்மைப் போக்கும் அவரை அப்பீடம் விட்டுவரும்படி வற்புறுத்திவிட்டன. அவரும் அங்கிருந்தும் இறங்கிவந்து கொள்கைக்காகப் போராட முன்வந்தார். அச்சம், தயை, தாட்சண்யமின்றி ஆளவந்தார்களின் குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டி அவர்களின் ஒடாத போக்கினை வன்மையாகச்சாடினர். பாசிச ஆணவ ஆட்சியை அகற்ற, இடது சாரியினரை ஒன்று திரட்டும் முயற்சியிலீடுபட்டு, ஐக்கிய சமதர்ம ஜனநாயகக் கட்சி ஒன்றைக்கண்டார். அந்தக் கட்சி எந்த அளவுக்குப் பலன் கொடுத்தது—பலன் கொடுக்கும் என்பது ஒரு புறம் இருந்தாலும், அவர் கொண்ட முக்கிய நோக்கம் அடக்குமுறை பாசிச ஆணவ ஆட்சி ஒழிய வேண்டும் என்பதேயாகும். அந்த அளவில் அவர் வரையறையின்றிச் செல்லும் அரசாங்கத்தை ஆங்காங்கு தடுத்து நிறுத்தும் அச்சுறுத்தும் அளவுகோலாக விளங்கினர் என்பதில் ஐயமில்லை.

வங்க மக்கள் அவர் பின்னால் அணிவகுத்து, அழகுற நின்று, செயலாற்ற முற்படும் நேரத்தில் அவர் மாரடைப்பால் மறைந்தார் என்ற துக்கச் செய்தி வேதனையைத் தருவதாக இருக்கிறது.

வங்கத்தில் நடைபெற்ற சட்டசபை உபதேர்தல் ஒன்றில் காங்கிரஸை எதிர்த்துத் தோழர் சரத்சந்திரபோஸ் போட்டியிட்டபோது, காங்கிரஸின் மாபெரும் தலைவர்களான நேரு, பட்டேல், பட்டாபி போன்றவர்கள் சுழற்காற்றுவேகத்தில், போஸுக்கு எதிராகத் தேர்தல் பிரசாரம் புரிந்தனர். தோழர் சரத் போஸுக்குப் போடும் ஒவ்வொரு வோட்டும் காங்கிரஸின் மீதுநம்பிக்கையில்லாமையைக் குறிக்கும், தேசத் துரோகத்தைக் குறிக்கும் என்றெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் பிரசாரம் செய்தனர். அவ்வேளையில் தோழர் சரத்போஸ் ஸ்விட்ஜர்லாந்தில் மருத்துவம் பெற்றுக்கொண்டிருந்தார். அவர் இங்கு இல்லை; என்றாலும் அவர் தேர்தலில் நிறுத்தப்பட்டிருந்தார். இறுதியில் பெருவாரியான வோட்டுகளைப் பெற்று வெற்றியடைந்தார் என்னும்போது, வங்க மக்கள் தோழர் சரத் போஸை எந்த அளவுக்குத் தலைவராக ஏற்றுக்கொள்ள உறுதி பூண்டிருந்திருக்கிறார்கள் என்பது இனிது விளங்கும்.

சுருங்கக்கூறின், தோழர் சரத்போஸ் ஆணவ பாசிச மனப்பான்மை கொண்ட காங்கிரஸுக்கு, அவர் ஒரு அபாயக்குறியாக விளங்கி வந்தார். அந்த அபாயக்குறி தானே மறைந்து விட்டது. தங்களுக்கு அச்சம் ஊட்டி வந்த அபாயக்குறி மறைந்தது கண்டு காங்கிரஸ்காரர்கள் மகிழ்ச்சியடையவுங் கூடும்! கரையும் காங்கிரஸுக்கு இதனால் ஒரு தேக்க நிலை ஏற்பட்டால் ஏற்படலாமேயொழிய, காங்கிரஸ் கரையப்போவது என்னமோ உறுதிதான். அதனைக் கரையவைக்க—நாட்டை நல்வழிப்படுத்த—அவர் விட்டுச் சென்ற வேலைகளைத் தொடங்க அவருக்குப்பின்னால் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். என்றாலும், பாசிச எதிர்ப்பு முன்னணியில் வீரராய் நின்ற தோழர் சரத்சந்திர போஸ் மறைந்தது ஒரு பெரும் நஷ்டமேயாகும். அவர் போன்ற நேர்மையாளர்கள் ஒருசிலரைத் தானே நாம் காணமுடிகிறது! அதனால்தான் அவர் இழப்பு ஒரு பெரும்நஷ்டமாகத் தோன்றுகிறது. அவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு அந்த எடுத்துக்காட்டு நாட்டவர்க்கு நல்ல முறையில் பயன்படுமாக! வாழ்க அவர் புகழ்!

அறிவுக் கதிர்!

ஒருவன் வாய்ப்பேச்சைக் காட்டிலும், அவனது மௌனம், அதிகமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.

—ஷேக்ஸ்பியர்

மதுவிலக்கினால் குற்றங்கள் குறைந்திருக்கிறதாம்!

கொழும்பு, பிப். 21—

'சென்னை மாகாணத்தில் பூரண மதுவிலக்கு ஏற்பட்டதன் விளைவாக பெரும் குற்றங்கள் மிகவும் குறைந்திருக்கின்றன. மதுவிலக்கை தளர்த்தவோ அல்லது ரத்து செய்யவோ எண்ணம் சர்க்காருக்கு இடையவே இடையாது" என்று சென்னை மந்திரி தோழர் மாதவமேனன் இங்கு கூறினர்.

மந்திரி தோழர் மாதவமேனன் இங்கு தங்கியிருக்கையில் இலங்கையின் இலவசக் கல்வித் திட்டம் அமுல் செய்யப்படுவதை நேரில் பார்த்து தெரிந்து கொள்வார்.

சென்னை மாகாணத்தில் கல்வி நிலைமைபற்றி அவர் கூறியதாவது—சென்னையில் ஆரம்பக்கல்வி மட்டும் தான் இலவசமாக அளிக்கப்படுகிறது. அது கட்டாயம்தான் என்றாலும் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு மாதிரியான கட்டாயமுறை அமுலிலிருக்கிறது. பள்ளிக்கூடம் போகும் சிறுவர் சிறுமியர்களின் தேவையை சமாளிக்கக் கூடிய அளவுக்குப் பள்ளிக் கூடங்கள் சென்னை மாகாணத்தில் இருக்கின்றன.

சரத்சந்திரபோஸ் மறைந்தார்

இருதய நோயால் திடீர் மரணம்!

கடைசி நேரத்திலும் கட்டுரை தந்த கண்ணியர்!

கல்கத்தா, பிப் 20—

சுபாஷ்சந்தரபோசின் தமையனாரும், இந்திய ஐக்கிய சமதர்ம இயக்கத்தின் தலைவருமான தோழர் சரத்சந்திரபோஸ் இன்றிரவு 11-40 மணிக்கு இயற்கையெய்தினர்.

தோழர் போஸ் கடந்த சில மாதங்களாக இருதய நோயினால் வருந்திக்கொண்டிருந்தார். அந்நோய் சற்று குணமடைந்து வந்ததால் மூன்று வாரங்களுக்கு முன்னர் எப்போதாவது நீதிமன்றத்துக்குப் போய் வந்துகொண்டிருந்தார். ஆனால் அவரால் எவ்வித வேலையும் செய்ய முடியவில்லை.

இன்று மாலை அவர் தற்போதுள்ள வகுப்புப் பிரச்சனை பற்றி விவாதித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, கிழக்கு-மேற்கு வங்க மக்கள் அமைதியையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி தமது "நேஷன்" பத்திரிகைக்கு கட்டுரை ஒன்றை மற்றொருவர் எழுத இவர் சொல்லிக்கொண்டே வந்தார். 11-10 மணிக்கு கட்டுரைமுடிந்தது. பின்னர் அவர் படுக்கைக்குச் சென்றார். உடனே அவருக்கு இருதயநோய் ஆரம்பமாயிற்று. நோய் அதிகரிக்கவே 11-40க்கு இயற்கை எய்தினர்.

தோழர் சரத்சந்திரர் தனது மனைவி, தோழியர் பிப்ஹாபதி போஸ், நான்கு ஆண் பிள்ளைகள், நான்கு பெண்கள், ஆகியோரை விட்டுப் பிரிந்தார். தோழர் போஸின் மூன்றாவது மகன் இப்பொழுது லண்டனில் இருக்கிறார்.

தோழர் சரத்சந்திரபோஸ் 1889-ம் ஆண்டு செப்டம்பர் 7-ம் தேதி பிறந்தார். கட்டாக், கல்கத்தா, லண்டன் முதலிய இடங்களில் கல்வி கற்றார். 1913-ம் ஆண்டு கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் சேர்ந்தார். காலஞ்சென்ற தேஷ்பந்து சித்தரஞ்சன்தாஸ் தலைமையின் கீழ் தோழர் போஸ் தனது அரசியல் பணியை மேற்கொண்டார்.

ஒத்துழையாமை இயக்கத்தின் போதும், கடந்த உலகப் போரின் போதும் ஆக இரண்டு முறை தோழர் போஸ் காவலில் வைக்கப்பட்டார். இவர் சில காலம் வங்க காங்கிரஸ் செயற்குழுவின் உறுப்பினராகவுமிருந்தார். 1937-முதல் 1945-வரை வங்க சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கிறார்.

1946-ல் மத்திய அசம்பிளிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார். பின்னர் இந்திய இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946 செப்டம்பர் முதல் நவம்பர் வரை பதவியிலிருந்தார். பின்னர் தனது அரசாங்க பதவியையும், காங்கிரஸ் செயற்குழுவில் வகித்து வந்த பதவியையும் ராஜினாமா செய்துவிட்டு, தனக்கென ஒரு கட்சியை அமைத்துப் பணியாற்றி வந்தார்.

கைவிரிப்பு!

புதுடில்லி, பிப். 20—

திருச்செந்தூரிலிருந்து கன்னியாகுமரிக்கும், திருவனந்தபுரத்திற்கும் இரயில்வே பாதைகள் போடுவதற்கான சர்வே நடத்தும்யோசனையொன்றும் சர்க்காருக்கு இல்லை என்று, இரயில்வே அமைச்சர் தோழர் கோபாலசாமி அய்யங்கார் பார்லிமெண்டில் அறிவித்தார்.

நன்றி!

மதுரை மாவட்டத்தில் நான் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது, பொதுக்கூட்டங்கள் கூட்டியும், வேறு பல பொது நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தும், அவைகள் வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் முடிவதற்குக் காரணமாக இருந்த தோழர்கள் அனைவர்க்கும், தனிப்பட்ட முறையிலும், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளன் என்ற முறையிலும் என் மனமார்ந்த நன்றியறிதலை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றுப் பிரயாணத் திட்டத்தை ஏற்பாடு செய்து, உடனிருந்து ஒத்துழைத்த தோழர்களான டி. ஆவுடையப்பன், மதுரை எஸ். முத்து, ராஜமான் ஆகியோர்க்கும், உடனிருந்து வசதிகள் செய்து கொடுத்து, பேருதவியாக இருந்த தோழர்களான அ. பொன்னம்பலனார் அவர்களுக்கும், கருத்தப் பாண்டியன் அவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

"மாலை மணி" அலுவலகம் சம்பந்தமாகவும், தலைமைக் கழக அலுவலகம் சம்பந்தமாகவும் பல வேலைகளை சென்னையிலேயே இருந்து நேரிடையாகக் கவனிக்க வேண்டியிருப்பதால், மார்ச் திங்கள் முழுமையும் முன்னரே ஒப்புக்கொண்ட சில நிகழ்ச்சிகளைத்தவிர வேறு எந்தப் பொதுநிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வதற்கில்லை என்பதைத், தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏப்ரல் திங்கள் இடையில்தான் மீண்டும் சுற்றுப்பிரயாணம் துவக்கவேண்டி நேரிடும். ஆகவே அதுவரையில் அழைப்புகள் விடுக்காதிருக்குமாறு நண்பர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர் தி. மு. க.

ஆலைகளை அரசாங்கம் நடத்தவேண்டும்

தென்னாட்டுப் பொருள்களுக்கு வடநாட்டில் விளம்பரம் உண்டா?

குமரப்பாக்கள் கூறட்டுமே!

சோழவந்தானில் அண்ணா!

(நமது தனி நிருபர்)

சோழவந்தான், பிப். 13

இங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இன்று மாலை 7 மணிக்கு வையையாற்றுத் திடலில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு அருப்புக் கோட்டைத் தோழர் எ. எஸ். இராமசாமி தலைமை வகித்தார். அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

இன்றைய சர்க்கார் ஜனநாயக சர்க்கார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் செய்வது எல்லாம் பழைய ஆங்கிலேய ஆட்சியை விட கொடுமை நிறைந்ததாகவேதான் இருக்கிறது. இன்று உண்ண உணவும், உடுக்க உடையும் இன்றி தெருக்களில் திரிகின்றார்கள் மக்கள்.

அளவிற்கு மீறிய உற்பத்தி, கடைசியில் ஏழ்மையையே செய்யத் தூண்டுகிறது. உதாரணமாக, காந்தியாரின் போதனையைப் பின்பற்றிய ஒருவன்தான் காந்தியாரைச் சுட்டுக் கொன்றான். எனவே அளவிற்கு மீறிய உற்பத்தி கூடாது என்றார். மற்றும் இன்றைய சர்க்காரின் போக்கையும், குடியரசு என்ற பெயரால், நடக்கும் ஆட்சியாளரின் போக்கையும் இந்நிலையும் இந்த நாட்டில் நிலைப்பதைக் கண்டித்தார்.

கே. ஏ. மதியழகன்

அடுத்தபடியாக திராவிட மாணவ முன்னேற்றக் கழக அமைப்பாளர் தோழர் கே. ஏ. மதியழகன் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:—

இன்று நமது நாட்டில் பஞ்சம், பட்டினி, மழை இல்லை இது போன்ற குறைகள்தான் மலிந்து விட்டன. திருப்பூர் குமரனும், செக்கிழுத்த சிதம்பரமும் மற்றும் எண்ணற்ற தியாகிகளும் சேர்ந்து பெற்றதுதான் இந்தக் குடியரசு என்பது. ஆனால் இந்த குடியரசின் கதி என்ன? மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்களா, இல்லை. எங்கு பார்த்தாலும் தடியடி தர்பார்தான் தாராளமாக நடைபெறுகிறது.

இந்திய சுதந்திரத்திற்காக தியாகம் செய்தவர்கள் இன்று நடைபெறும் நிகழ்ச்சியைக் கண்டால் கூட வெட்கப்படுவார்கள். இதற்காகவா நாம் இவ்வளவு கஷ்டப்பட்டோம் என்று. இன்னும் இரு ஆண்டுகளில் பேரால் இந்திய சர்க்கார் செய்யும் செலவையும், பஞ்ச நிலையைக் கவனிக்காதது குறித்தும் பேசினார்.

என். வி. நடராசன்

பின்னர் அமைப்புக்குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் பேசும்போது கூறியதாவது:—

கடந்த ஆறு தினங்களாக மதுரை மாவட்டத்திலே அண்ணாதுரை அவர்கள் பேசி இருக்கிறார்கள். இதனால் அவருக்கு சில சங்கடமான நிலைமையும் உண்டாகி இருக்கிறது. ஏதோ அவரின் பேச்சைக் கேட்டோம் என்று இருந்து விடாமல், கனியூர் மாநாட்டிலே கேட்டுக் கொண்டபடி குறைந்தது ஒரு லட்சம் அங்கத்தினர்களையாவது நீங்கள் சேர்த்துத் தரவேண்டும், அதுதான் உங்கள் கடமை. நாடகம் நடத்த நல்ல நடிகர்களைக் கொண்டு வந்து நடிக்கச் செய்து பரவசமடைவதுபோன்று இருந்துவிடாமல், செயலில் உங்கள் வேலைத் திறனைக் காட்டவேண்டும். அங்கத்தினர்கள் அதிகம் சேர்த்தால்தான் இனி மாநாடு நடத்துவதற்கு அனுமதி தரப்படும். எனவே நமது வேலைத் திட்டத்தை விரைவாகச் செய்ய வேண்டுமென்றும் இன்னும் அரசியல் பற்றியும், சேலம் சிறைச் சம்பவத்தைக் கண்டித்தும் பேசினார்.

அண்ணாதுரை

அடுத்தபடியாக பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை பலத்த கைதட்டலுக்கு இடையே எழுந்து இன்றைய நிலை பற்றி மிக விளக்கமாகப் பேசினார்கள். அப்போது அவர் கூறியதாவது:—

நான் இன்று உங்களிடையே பேசுவதற்கு முன்னால் தோழர் ஜே. சி. குமரப்பா அவர்கள் பழமையை விரும்பிப் பேசியிருப்பார். அதுபோது காந்திய தத்துவத்தை கடைப்பிடிக்க வேண்டுமென்று சொன்னாராம்.

காந்திய வழியில் செல்லும் நண்பர் ஜீப் காரில்தான் ஏறிக்கொண்டு வந்திருப்பார். அதுமட்டுமல்ல இவர்கள் உபயோகப்படுத்துவதெல்லாம் வெளிநாட்டு சாமான்கள்தான். சுதேசியை ஆதரிக்கச் சொல்லும் இவர்கள் என்ன நக்கு கண்டுபிடித்துத் தந்தனரா? பஞ்சம் வாட்டுகிறது, மழையில்லை, பட்டினியாக மக்கள் மடிகின்றனர். இவைகளுக்கு மாற்றம் தந்தார்களா? இல்லை!

நான்கு வேதம் இருந்த காலத்தில்தான்...!

இந்த நாட்டில் நல்லதங்காள் என்ற பெண் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவள் பச்சை மட்டையை வைத்து நெருப்பு எரித்தாள் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி பட்டபத்தினிதான், தனது நாட்டில் 12 வருடம் மழையில்லாததால் பட்டினியாக, தனது ஏழு குழந்தைகளை கிணற்றில் போட்டு மாண்டதாகச் சொல்லப்படுகிறது. பச்சை மட்டையில் நெருப்பு எரித்த பத்தினி இந்த நாட்டின் மழை இல்லாமையையும் போக்கி இருக்கலாமே! அப்பொழுதெல்லாம் நாஸ்திகம் பரவவில்லையே. ஏன் செய்ய முடியவில்லை அந்தப் பத்தினியால்? அதுமட்டுமல்ல, நான்கு வேதங்களும் போற்றப்படுமல் ஓதப்பட்ட காலத்தில்தானே இந்த நாட்டை அன்னியர்கள் பிடித்தனர். ஆயிரமாயிரம் கடவுள்கள் இந்நாட்டிலே தோன்றி இருக்கின்றனர். மீருதத்தைக் கொட்ட நந்தியும், நடனமாட ஊர்வசியும் இப்படி கடவுள்கள் இருந்த காலத்தில்தானே ஆங்கிலேயன் இந்நாட்டைப் பிடித்தான். ஒன்று இந்தக் கடவுள்கள் திறமை அற்றவர்கடவுள்களாக இருக்கவேண்டும், அல்லது ஆங்கிலேயனிடம் ஏதாவது லஞ்சம் பெற்றுக்கொண்டு சும்மா இருந்திருக்க வேண்டும் (பலத்த சிரிப்பு) இதைத்தான் இன்று தி. மு. கழகம் கேட்கிறது.

தொழிற்சாலைகளை சர்க்கார் நடத்தினால் என்ன?

"ஆலைத் துணிகளை வாங்காதே, உனக்குத் தேவையான துணிகளை நீயே தயார் செய்துகொள்" என்று குமரப்பா கூறினார். இதை நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் ஆலைகள் அழகப்பச் செட்டியாரிடமோ, பிர்லாக்களிடமோ இல்லாது சர்க்காரிடமிருந்தால் மக்களுக்கு எவ்வளவோ நன்மை இருக்குமே. இதை மறந்துவிடலாமா? என்று கேட்கிறேன்.

இதைவிட்டு சுதேசியை வாங்குங்கள் என்று கூறுவதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

நான் இன்று பேசுகிறேன். என் முன்னால் உள்ள மைக் மூலம் தூரத்தில் உள்ள உங்களுக்கு என் குரல் நன்றாகக் கேட்க முடிகிறது. இந்தக் கூட்டத்தில் நான்கு மின்சார விளக்குகள் இருக்கின்றன. நண்பர் குமரப்பா யோசனைப்படி பார்த்தால் இந்த விளக்குகளின் வெளிச்சத்தைத் தரவேண்டுமானால் நூற்றுக்கணக்கான தீவட்டிகள் தேவைப்படும். இந்தத் தீவட்டிகளை தூக்குவதற்கு நூற்றுக்கணக்கானவர்களும், திரிபோட நூற்றுக்கணக்கானவர்களும், எண்ணெய் ஊற்ற நூற்றுக்கணக்கானவர்களும் தேவைப்படும். அப்பொழுது கூட்டத்திற்கு சுமார் இவைகளுக்கே போதுமே, இந்த நிலையை நீங்கள் விரும்புகிறீர்களா?

விஞ்ஞான முறை வேண்டும்

இன்றைய தினம் சென்னையில் உள்ள சர்க்கார் பஸ்களின் மூலம் சர்க்காருக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் லாபம் கிடைக்கிறது. இதுபோன்று எல்லாத் தொழில்களையும் சர்க்காரே ஏற்றுக்கொண்டு அவைகளை விஞ்ஞான ரீதியில் நடத்தினால், அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தொழிலாளர்களுக்கும் நன்மை செய்யலாமே. அதைவிடுத்து மில்களில் தயார் செய்யும் துணிகளை பகிஷ்கரியுங்கள் என்று அன்னியர்கள் தயார் செய்யும் காரில் ஏறிக்கொண்டு பிரச்சாரம் செய்வதில் அர்த்தமிருக்க முடியாது. இம்முறைதான் மாறவேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம்.

ஆள் குற்றமா, தராசு குற்றமா?

வெள்ளையனிடமிருந்து காங்கிரஸ்காரர்கள் பொறுப்பேற்றுள்ளனர். இவர்களிடையேதான் அதிகமான ஊழல்கள் மலிந்துவிட்டன.

நாம் ஒரு கடைக்குச் சென்று கடைக்கார முதலாளியிடம் ஒரு வீசை சர்க்கரை வாங்கிக்கொண்டு வருகிறோம். உடனே வீட்டிற்கு வந்து அந்த சர்க்கரையை நிறுக்கும்போது முக்கால் வீசை சர்க்கரைதான் இருக்கிறது. உடனே கடைக்காரரிடம் சென்று விஷயத்தைச் சொல்கிறோம். கடைக்கார முதலாளி உடனே அந்த சர்க்கரை நிறுத்த குமாஸ்தாவை நீக்கிவிட்டு வேறு இன்னொரு குமாஸ்தாவை நியமிக்கிறார்.

பின்னர் அவரிடம் சென்று ஒரு வீசை சர்க்கரை வாங்குகிறோம். அதை வீட்டிற்கு வந்து நிறுக்கும்போது அதே முக்கால் வீசைதான் இருந்தால் நாம் என்ன நினைப்போம்? உண்மையிலேயே குமாஸ்தாமீது தவறில்லை. அவர் நிறுத்த தராசிலேதான் தவறு இருக்கிறது என்று கருதுவோம். உடனே அதை கடைக்கார முதலாளியிடம் கூறுவோம் உங்கள் குமாஸ்தாவிடம் தவறு இல்லை உங்கள் தராசிலேதான் தவறு இருக்கிறது. எனவேதான் தராசை மாற்றுங்கள் என்று. அதுபோலத்தான் இன்றைய காங்கிரஸ் ஆட்சியிலே உள்ள தவறை திருத்துகிறது தி. மு. கழகம். இதைக் கண்டு தேசியத் தோழர்கள் இருக்கவேண்டுகிறேன். தங்களிடையே உள்ள குறைகளைத் திருத்த முயற்சிக்க வேண்டுமே அல்லாது, எங்கள்மீது சீறிப்பாய்வதில் இல்லை.

இன்றைய தினம் நமது நாட்டில் தொழில்வளம் மிகவும் நசித்துப் போய்விட்டது. தமிழ் நாட்டில் உள்ள புகைவண்டி நிலையத்தில் எல்லாம் ஓர் போர்டு தொங்கவிடப் பட்டுள்ளன. அதில் ஒரு புருஷ படமும் போட்டும், அல்லது ஒரு பெண்ணை முன்று நான்கு கலரில் படம் போட்டு, அதன்கீழ் அஹமதாபாத் சேலையை வாங்குங்கள் என்றுதான் எழுதியிருக்கும். வாங்குவது அந்தப் பெண்களையா, அல்லது சேலையையா என்றுதான் கேட்கத் தோன்றும். ஏன் இந்த நிலை? வடநாட்டில் இதுபோன்று, காஞ்சிபுரம் சேலை சால் போகாது என்றும், புளியங்குடி வேஷ்டி நன்றாக இருக்கும் என்றோ விளம்பரம் செய்யப்பட்டிருக்கும்? இருக்கும் என்று குமரப்பாக்கள் கூறமுடியுமா? அண்டைவீட்டுக்காரன்தான் என்றாலும் இதுபோன்ற நிலை ஏற்படலாமா?

நம்முடைய நாட்டில் மலையாளம், தெலுங்கு, தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் எல்லாம் தமிழ் என்ற மூலத்திலிருந்து வந்ததால் இவர்கள் எல்லோரையும் திராவிடர்கள் என்று அழைக்கிறோம். இந்தத் திராவிடநாட்டின் தொழில்கள் எல்லாம் பாதுகாக்க வேண்டுமேயானால் அந்தத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அவசியம். இதற்கு ஆங்கிலத்தில் "டாரிப்" என்று பெயர். இந்த முறை கையாளப்பட வேண்டுமானால், நிச்சயம் நமது நாடு நமக்காக வேண்டும். வடவர்களுக்கு வரப்பு போட ஒப்புக் கொள்கிறோம், வீட்டிற்குக் கதவு தேவை என்கிறோம். அதே நேரத்தில் ஒரு நாட்டின் தொழில் வளர ஒரு எல்லை தேவை என்றால் கோபப்படுவானேன் என்று கேட்டார். மற்றும் பல சர்க்காரின் இன்றைய போக்கையும், கடவுள் பெயரால் நடைபெறும் பித்தலாட்டங்களையும் விளக்கினார்.

வரவேற்பும், பணமுடிப்பும்

தோழர் அண்ணாதுரைக்கு பல சங்கங்களின் சார்பாக வரவேற்புகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. வீரசிங்கபுரம் தோழர்களால் 101 அணாக்களைக் கொண்ட பணமுடிப்பு ஒன்று அண்ணாதுரையிடம் தரப்பட்டது.

பின்னர் மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் நா. ஆவுடையப்பன் அவர்கள் நன்றிகூறும்போது கடந்த ஆறு தினங்களாக மாவட்டச் சுற்றுப் பிரயாணத்தின்போது ஒத்துழைத்த நண்பர்களுக்கும், பொது மக்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

எல்லோருக்கும் உணவு

அடுத்தபடியாக தோழர்கள் அண்ணாதுரை, என். வி. நடராசன், அ. பொன்னம்பலம், சுந்தரப் பாண்டியன், எஸ். முத்து, கே. எஸ். இராசமாணிக்கம், அய்யாச்சாமி, மற்றும் நூற்றுக்கணக்கான இயக்கத்தோழர்களுக்கும் பால், இரவு உணவும், சிற்றுண்டிகளும் கடந்த மூன்று தினங்களாக அளித்தார்கள். மறுநாள் காலை 12 மணிக்குமேல் அண்ணாதுரை அவர்கள் தங்கள் குழுவினருடன் சிவகங்கைக்குப் பயணமானார்கள். பெருங்கொடையான மின்சாரத் தமது பயணத்தின்போது ஒரு சில இடைஞ்சல்கள் காரணமாக விடப்பட்ட போடி, தேனி, ஆகிய இந்த இடங்களுக்கும் பின்னால் அடுத்த மாதம் வருவதாகச் சொன்னார்கள்.

பின்னர் கடந்த ஆறு நாட்களாக தங்களுடன் உதவி புரிந்த இயக்கத் தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, சிவகங்கைக்கு பயணமானார்கள். (நமி)

மாரிஸன் தேர்தல் காரியாலயத்தில் சூறை

லண்டன், பிப். 21—

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் தென்லுவிஷாம் தொகுதியில் தொழிற்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் ஹெர்பர்ட் மாரிஸனின் தேர்தல் காரியாலயம் சூறையாடப்பட்டிருக்கிறது.

புகுந்தவர்கள் யார் என்று தெரியவில்லை. ஆனால் பீரோ உடைக்கப்பட்டு, அதிலிருந்த ரகசிய தஸ்தாவேஜுகள் எல்லாம் தரையில் சிதறுண்டு கிடந்தன என்றும், இந்த தஸ்தாவேஜுகள் மூலம் மாரிஸனின் தேர்தல் ரகசியங்கள் சில பிறர் அறிந்து கொண்டிருக்கலாம் என்று மாரிஸனின் ஏஜெண்டு கூறுகிறார். கன்ஸர்வேடிவ் பிரசாரகர்கள் இவ்வேலையைச் செய்திருக்கும் என்று சந்தேகிக்கப் படவில்லை.

அவர்கள் :: :: உபதேசம்

ஒவ்வொரு அங்குல நிலமும் உணவுப் பொருள் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். நெல், கோதுமை, ராகி, சோளம், காய்கறி ஏதாவதொரு வகை உணவுப் பொருளை, உற்பத்தி செய்யுங்கள் என்று உணவுத் துறை அமைச்சர் உபதேசம் செய்கிறார்.

புகையிலை, கரும்பு, கோதுமை பருத்தி போன்றவைகளை நாம் மேலும் அதிகமாக உற்பத்தி செய்து, உள்நாட்டுக்காக மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் அனுப்ப வேண்டும்—வெளிநாட்டு வியாபாரம் தழைக்க வேண்டும். ஆகவே, உழவர்களே! பணம் தரக்கூடிய வியாபாரப் பயிர்களை அதிகப்படுத்துங்கள்—என்று வியாபாரத்துறையைக் கவனித்துக்கொள்ளும் மந்திரி உபதேசம் செய்கிறார்.

கிடைக்கிற நிலத்திலெல்லாம், வியாபாரப் பயிர், உணவுப் பொருளுக்கான பயிர், என்ற திட்டப்படி, பயிரிட்டு விடுகிற காரணத்தால், கால்நடைகளின் தீவனத்துக்கான பச்சையும் புல்லும் வளர்க்க நிலம் இல்லாமல் போய்விடுகிறது. கால்நடைகள் தீவனமின்றி மாண்டுபோகின்றன. ஆகவே, கால்நடைகளுக்குத் தேவையான, தீவனம் வளருவதற்கு நிலம் வேண்டும், என்று கால்நடைத் துறையிலே கவலைகொள்ளும் அமைச்சர் உபதேசம் செய்கிறார். ஏழை திகைக்கிறான், இப்படி ஒருவர் உபதேசம் இன்னொருவரின் உபதேசத்துக்கு முரணாக இருக்கிறதே, யாருடைய உபதேசத்தைக் கேட்டு நடப்பது, யாருடைய உபதேசத்தை விட்டுவிடுவது, என்று தெரியாமல் திணறுகிறான்.

சரத்போஸ் மறைவுக்கு அ இ குடியரசுக் கட்சி வருத்தம்

சென்னை, பிப். 21—

அகில இந்தியக் குடியரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டமொன்று, இன்று கூடி, கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்திய நாட்டின் உரிமைக்காகப் பெருந்தொண்டு செய்து தியாகங்கள் பல புரிந்த சரத்சந்திரபோஸின் மறைவு குறித்து இக் கூட்டம் மிகவும் வருந்துகிறது.

அவருடைய திடீர் மறைவு, இந்திய அரசியலுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமாகும். போஸ் சகோதரர்களின் நினைவு இந்நாட்டு மக்களின் இதயத்தில் என்றும் இருக்கக்கூடியதுதான் ஆகும். இக் கூட்டம் சரத்போஸின் மனைவியாருக்கும், அன்னார் குடும்பத்திற்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அமெரிக்கா மூலப் பொருள்களை சேர்த்துவைக்கிறது

வாஷிங்டன், பிப். 21—

உலக நிலை அவ்வப்போது மாறி வருவதால் மூலப் பொருள்கள் அவசியமானபோது கிடைக்காமல் போய் விடக்கூடாது என்பதற்காக யு. எஸ். தளவாட போர்டு தகரம் ரப்பர், குரோமைட், மாங்கனீஸ் முதலிய 11 பொருள்களை வாங்கி சேமித்து வருகிறது, ஏப்ரல் மாத முடிவிற்குள் 4000,000,000 டாலர் மதிப்புள்ள மூலப் பொருள்கள் சேகரிக்க படுமென்று என்று தெரிகிறது.

கழக நடவடிக்கைகள்

தஞ்சாவூர் புரம்:—3—2—50 இரவு 8 மணிக்கு தோழர் மு. அருணாசலம் தலைமையில் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சென்ற பொதுக் கூட்ட வரவு செலவு கணக்கு சரி பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பொதுச்செயலாளர் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது இங்கு ஒரு பொதுக் கூட்டம் நடத்த அவர்களை அழைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பொதுக்கூட்டம் 9—1—50-ல் நடைபெற்றபோது

நிதி வசூல் ரூ	195—8—0
செலவு ரூ	78—6—0
மீத இருப்பு ரூ	117—2—0

* * *

வாசுதேவநல்லூர்:-17-1-50ல் இவ்வூர் தி. மு. க. உறுப்பினர் கூட்டம் தோழர் டி. என். சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது 10-1-50ல் நடந்த தலைக்கு விழாப் பொதுக்கூட்டத்தின் வரவு செலவு சரிபார்க்கப்பட்டு, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் நெல்லை மாவட்டக் கழகத்திற்குத் தோழர்கள் எஸ். சுப்பிரமணியம், மு. கணபதி இருவரையும் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் மு. கணபதியை செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

* * *

சத்தியமங்கலம்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழு அவசரக் கூட்டம், தோழர் எஸ். கே. சென்னியப்பா அவர்கள் தலைமையில் 10 2 50-ம் தேதி இரவு என். எச். அமீர், தையல்கடையில் கூடியது.

அதுபோது, தோழர் எஸ். ஜி. கண்ணப்பனால், பெரியார் ஈ. வே. கி. அவர்களின் மறைவு பற்றி அனுதாபத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவரின் வாழ்க்கை பற்றியும், அன்னார் ஏழைகளுக்குச் செய்து வந்த வைத்திய உதவியையும், அவர் செய்த பல நற்பணிகளையும், அவரது பிரிவால் வருந்தும் அவர் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும் பேசினர். 2 நிமிடம் மௌனமாக இருந்து அனுதாபம் தெரிவித்துக் கொண்டனர். பின்னர் கூட்டம் முடிந்தது.

* * *

சிவகாசி:—15-2-50-ல், இந்நகரில் சிவன்கோவில் முன்பாக பி. சி. அருணாசலம் தலைமையில் தி. மு. க. கொடியேற்று விழா நடைபெற்றது. அதுபோது, கழகத் தோழர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். மாலை 6 மணிக்கு ஏ. சுப்பையா அவர்கள் கடை முன்பாக பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

* * *

கடம்பூர்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 6 2-50 திங்கள் மாலை 5-30 மணிக்கு தோழர் எம். எஸ். பொன்னுசாமி தலைமையில் கூடி மாவட்டக் கழகம் எற்பதற்கும், மாவட்ட செயலாளர் இவைகளை அலுவல்களை நடத்திச் செல்லக்கூடிய தகுதி வாய்ந்தவரை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதிருப்பதால் தி. மு. க. கிளையின் சார்பாக தோழர்கள் வே. மு. மாரியப்பன் ரா. முத்துமாலை ஆகிய இரண்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டு இனிது நிறைவேறியது.

கோவை:—12—2—50 காலை 10 30 மணிக்கு, கோவை நகர தி. மு. க. கட்டிடத்தில், வழக்கம் போல் சொற்பயிற்சி நடைபெற்றது. அதுபோது கூட்டத்திற்குத் தோழர் முகமது அலி தலைமை வகித்தார். அன்றைய கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி, அவர்கள் மறைவு குறித்து ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர்கள் எஸ். ஏ. ராசமாணிக்கம், கிருட்டிணராசு, பு. வா. ஜெயபால், சுப்பிரமணிய சங்கரய்யா, முத்து ஆகியோர் இன்றைய குடியரசின் சாதுக்கள் என்பது குறித்துப் பேசியபின், செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சைதாப்பேட்டை:—இவ்வூர் தி. மு. க. சார்பில் 11-2-50 மாலை 6¼ மணிக்கு சைதை குளத்தெருவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புலவர் ஆறுமுகம் தலைமை வகித்து கட்சி தோன்றியவிதம், வளர்ந்து வரும் விதம் யாவற்றை விரிவாகக் கூறினார்கள். அடுத்து தோழர் ச. அப்பாதுரை அவர்கள் சமூகத்தைத் திருத்த வைத்துப் பேசினார்கள். தோழியர் மலர்மேனி அப்பாதுரை அவர்கள் பெண்கட்கும் அறிவுரை கூறினார்கள். பின்னர் தனமனோகன் இந்து நேசம் இயற்கை பற்றி பேசினார். கடைசியாக சி. பி. சிற்றரசு மதம், கலை, தமிழ் ஆரியம் இவைகளைப் பற்றி பேச 8.45 மணியளவில் கூட்டம் முடிவுற்றது.

* * *

பெங்களூர்:—12 2 50 அன்று காலை 11 மணிக்கு, கர்நாடக பகுதி மாவட்ட அமைப்புக்குழு கூட்டம் பெரியார் நகர் தி. மு. க. கட்டிடத்தில் நடந்தது. விவாதம் நான்கு மணி நேரம் தொடர்ந்து நடந்தது. கூட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

* * *

எட்டயபுரம்:—12-2 50 ஞாயிறு இரவு 8-மணிக்கு எட்டயபுரம், தி. மு. கழகக் கூட்டம், நடுவிற்பட்டி, குமரன் நிலயத்தில் நடந்தது. தோழர் சதாசிவம் அவர்கள் தலைமைதாங்கினார்கள். அவ்வமயம் தற்கால அரசியல்பற்றியும், கழக நடவடிக்கைகள்பற்றியும் தோழர்கள் மு. நடராஜன், எஸ். சுப்பையா, மு. வெற்றிவேல், சு. சண்முகவேல், கலியாண் ஆகியோர்கள் பேசினார்கள். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செயலாளர் மு. வெற்றிவேல் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

தீர்மானங்கள்: ஈரோடு தோழர் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களின் திடீர் மறைவுக்கு வருந்தியும், அன்னார் குடும்பத்திற்கும், தோழர் சம்பத் அவர்கட்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தது.

மார்ச் 2 வது வாரத்தில் சென்னை தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்களை அழைத்து பொதுக்கூட்டம் நடத்த தீர்மானித்தது.

* * *

எட்டயபுரம்:—திங்களன்று எட்டயபுரம் கலைக்கழக ஆண்டுவிழா, நடுவிற்பட்டி முத்தாலயன்கோவில் மைதானத்தில் நடந்தது. விழாவிற்குத் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமைதாங்கி, பண்டைய தமிழர் நாகரீகங்கள், இன்றைய தமிழர்களின் தாழ்ந்த நிலை, பிற மொழிக் கலப்பால் தமிழ் கெட்டது பற்றி, மிக அழகாக 3-மணி நேரம் பேசினார்கள். பின்னர் அருப்புக்கோட்டை சீனிச்சாமி, கலிங்கன், ஆத்தியப்பன். ரா. ச. சாமி ஆகியோர்கள் பேசினார்கள். தி. முத்துராமகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பல கழகங்களின் சார்பில் திருச்சி விசுவநாதம் அவர்கட்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டது.

தி. மு. கழகக் கூட்டங்கள்

23 - 2 - 50

இராமநாயக்கன்பேட்டை:— சி. பி. சிற்றரசு

24 - 2 - 50

அறந்தாங்கி:— சி. என். அண்ணாதுரை, என். எஸ். இளங்கோ, ஜி. பாராங்குசம்.

சோழமூர்:— சி. பி. சிற்றரசு, முனிரத்தினம்.

படேல் ஸ்தானில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் முதலமைச்சராகக் கொலுவீற்றிருக்கிறார், ஒரு சாஸ்திரி!

ஹீராலால் சாஸ்திரி என்பவரைத்தான் படேல், முதலமைச்சராக்கி இருக்கிறார். ஜெய்பூர் சமஸ்தானத்தில் மிகச் சாதாரண தரமுள்ள வேலையில் இருந்தவருக்கு, இந்தப் பெரிய, பொறுப்பான பதவி தரப்பட்டது பொது மக்களிடம் ஆச்சரியத்தை மூட்டிற்று

இதுமட்டுமா! ஜெயப்பூரில், சர். மிஸ்ரா இஸ்மாயில் திவானாக இருந்துகொண்டு, பொறுப்பாட்சிக்காகக் கிளர்ச்சி செய்தபோது, அடக்குமுறையை அவிழ்த்து விட்டார். அதுபோது இந்த சாஸ்திரி, திவான் ஜிக்கு துணைநின்றவர். மக்களைக் காட்டிக் கொடுத்த மகானுபாவராயிற்றே இந்த சாஸ்திரி, இவரையா மக்களாட்சியில் முதலமைச்சராக்குவது என்று மக்கள் மனம் பதறுகிறார்கள். இவரைப் பட்டேல் நியமித்த காரணம் என்ன? சூட்சமம் இருக்கத்தான் செய்கிறது.

சாஸ்திரி, பிர்லாவின் எடுபிடிகளில் ஒருவர் பிர்லாவின் பேராசைத் திட்டங்கள் அனைவரும் அறிந்ததே.

ராஜஸ்தானில் பெட்ரோல் கிடைக்கலாம் என்று தெரியவருவதல், அங்கு பிர்லா, மேய்ப்பம் பிடித்துக்கொண்டு பேயிருக்கிறார். ராஜஸ்தான் சமஸ்தானம் பூராவிலும் உள்ள ஓட்டல்கள், விடுதிகள் அனைத்தும் இப்போது பிர்லாவுக்குச் சொந்தமாகி விட்டனவாம்.

வனஸ்பதி போன்ற செயற்கை நெய், முன்பெல்லாம் விற்கக் கூடாது என்று சட்டம் இருந்தது. இப்போது அந்தச்சட்டம் மாற்றப்பட்டு, மார்க்கட்டிலே செயற்கை நெய் ஏராளமாகக் குவிந்து கிடக்கிறது.

இவையாவும் பிர்லா கம்பெனி சரக்கு' இவ்விதம் பிர்லாசுறண்டிக்கொண்டிருக்கிறார்-இதற்கு இவருடைய 'ஆள்' ஒருவர் அதிகாரத்தில் இருந்தால் தானே வசதி, சாஸ்திரி, அதற்காகவே அமர்த்தப்பட்டிருக்கிறார்.

அவருடைய துணை மந்திரிகளின் குணுதிசயமும் இது போன்றதாகும். பிர்லாக் கும்பலிடம் சிக்கிக்கொண்டோம் என்று மக்கள் பதறுகின்றனர்.

பிர்லா, ராஜஸ்தான் இனி தன் பிரத்யேகமான வேட்டைக் காடு என்று எண்ணிக் களிக்கிறார்.

சாஸ்திரி தர்பார், மக்களைச் சஞ்சலமடையச்செய்கிறது.

சாஸ்திரியோ, பட்டேல் ஜியின் ஆசி இருக்குமட்டும், பொதுமக்கள் என்ன செய்துவிடமுடியும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார். பணப் பிடுங்கிகள் படுத்தும் பாடு பற்றி பம்பாய் பிளிட்ஸ் பத்திரிகை விளக்கம் தருகிறது

அறுபது இலட்சம் மக்கள் சாஸ்திரி தர்பாரில் சிக்கித் தத்தளிக்கிறார்கள்.

சாஸ்திரியோ, தன் எஜமானர்களான படேல், பிர்லா, ஆகியோரின் புன்னகையை பெறுவதற்கான முறையிலே நடந்துகொள்ளுகிறார் மக்களைப்பற்றிக் கவலையற்று. ஜெயபூரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டுக்காக, ராஜஸ்தானில் உள்ள ஜெய்பூர், பிகானீர், உதயபூர் போன்ற சமஸ்தானங்களிலிருந்து சாஸ்திரி பணம் திரட்டிக் கொடுத்திருக்கிறார்,—14 இலட்சம் ரூபாய்!

ஜெயபூர் மாநாடு, வெறும் ஜல்சா'-என்பதை அனைவரும் கூறினர்-இதற்கு, ராஜஸ்தான் மக்கள் கொட்டி அழுத தொகை 14 இலட்சம்.

படேல், சாஸ்திரியின் முதுகைத்தட்டி கொடுக்காமலிருப்பாரா! மக்கள் வாடுகிறார்கள்-வாடட்டுமே—வந்தேமாதரம் என்று பாடிவிட்டால் வாட்டம் போய்விடுகிறது, என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் சாஸ்திரியின் சகாக்கள்

சாஸ்திரி தர்பார், ஜெய்பூர் மாகாண காங்கிரஸ் கமிட்டியாலேயே கண்டிக்கப்பட்டது-எனினும் சாஸ்திரி கலங்கவில்லை. ராஜஸ்தான் படேல் ஸ்தானாகி விட்டது-படேலும் பிர்லாவும் எஜமானர்களாகி விட்டனர்-சாஸ்திரி, அச்சமின்றி தர்பார் நடத்துகிறார்

பெட்ரோலுக்குப் பதில் டீசல் பஸ்கள்

லண்டன், பிப். 21—

லண்டன் போக்குவரத்து காரியாலயம் தன்னிடமுள்ள 7000 பெட்ரோல் பஸ்களை டீஸல் ஆயில் பஸ்களாக மாற்றி வருகிறதென்றும், இவ்வேலை அநேகமாக முடிவடையும் கட்டத்திலிருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

டீஸல் எண்ணெய் மலிவாகக் கிடைப்பதுடன் ஒரு காலன் பெட்ரோலினால் எவ்வளவு மைல்கள் ஓட்டமுடியுமோ அதைப்போல் ஒருகாலன் டீஸலினால் இரட்டிப்பு மடங்கு தூரம் ஓட்டமுடியும் என்பதே பஸ்கள் டீஸல் பஸ்களாக மாற்றப்படுகின்றன. டீஸல் பஸ்கள் பெட்ரோல் பஸ்களைப்போல் அடிக்கடி ரிப்பேர் ஆவதில்லையாம்.

புதுமை நல்கும் புதிய வெளியீடு! பருவமடைந்தவர்கள் படிக்கவேண்டிய அபூர்வ நூல்!!

மடாதிபதிகளின் லீலைகள்

அல்லி இதழாரோடு கூடிக்களித்த ஆடம்பரசாமிகள் கள்ளக்காதலரோடு கன்யாஸ்திரிகளின் கோலாகலம் உலகமே பாராட்டும் உள்ளத்தைக் கிளறும் அற்புத கதைகள். இதுபோல் புத்தகம் இதுவரை வெளிவந்ததே இல்லை. புத்தகம் ஒன்று அணா எட்டு வியாபாரிகள் 20% டெபாசிட் முன் பணத்துடன் ஆர்டர் செய்யவேண்டும் எங்கும் விற்பனையாளர்கள் தேவை

கதம்பம் நிலையம் காரைக்கால் (T, DT)

இனி நடப்பவை

அறந்தாங்கி:—இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் 24-2-50 வெள்ளி மாலை 6 மணிக்கு, இவ்வூர் தோடி வ. உ. சி. திடலில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ஜி. பாராங்குசம் தலைமை வகிப்பார். தோழர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ., என். எஸ். இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சோழமூர்:-குடியாத்தம் தாலுகா சோழமூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் 24—2—50 வெள்ளி மாலை 4 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் க. முத்துசாமி அவர்கள் தலைமையில் தோழர்கள் சி. பி. சிற்றரசு முனிரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை சேரிவாழ்வோர் மாநாடு

சென்னை, பிப். 21—

சென்னை, சேரி வாழ்வோர் நலக் கழகப் பிரதிநிதிகளைக் கொண்ட மாநாடொன்றை 26—2—50 காலை 10 மணிக்குக் கூட்டுவதாக, சென்னை நகராண்மைக் கழகக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஷை கூட்டம், சென்னை லேபர் யூனியன் (136, ஸ்ட்ராகன்ஸ் ரோடு, P. B. சென்னை) கட்டிடத்தில் நடைபெறும். நகர மக்கட் தொகையில் 3 லட்சத்திற்கு மேற்பட்டவர்களாயுள்ளவர்களான சேரிவாழ்வோரின் தேவைகளையும், நாகரிக வசதிகளையும் செய்து தருவதற்கான சிபார்சுகளை கார்பரேஷனுக்கு இக் கூட்டத்தில் தெரிவித்துக்கொள்ளப்படும்.

பிரயாணத்திலேயே பிரசவம்!

திருச்சி, பிப். 17—

இன்றுகாலை சுமார் 5 மணிக்கு திருச்சி 2-வது ரயில்வே பிளாட்பாரத்தில், ராஜபாளையத்திலிருந்து தஞ்சாவூர் செல்லவிருந்த, அக்கம்மாள் என்ற மாது திடீரென்று பிளாட்பாரத்திலேயே பெண் மகவு ஒன்றை ஈன்றெடுத்தாள் உடனே திருச்சி ரயில்வே டாக்டரின் முதல் சிகிச்சைக்குப்பின் திருச்சி சர்க்கார் மருத்துவ விடுதிக்கு அனுப்பப்பட்டது. தாயும் சேயும் நலம்.

தஞ்சை மாவட்டத்தில் புதிய வாய்க்கால்

நாகப்பட்டினம் தாலுகா வெண்ணைச் சேரி கிராமத்தில் சுமார் 100 ஏகரா புதிய சாகுபடிக்குக் கொண்டுவர 300 செலவில் கிராவட்டானிலிருந்து புதிய வாய்க்கால் ஒன்று சர்க்காரால் வெட்டப்படுமென்று தெரிகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1